**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 86** **நாள்: 10.06.2016**

## <u>அறிவிப்பு</u>

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கழிப்பறை இல்லாத வீட்டு உரிமையாளர்கள் தங்கள் வீடுகளில் கழிப்பறை அமைக்க மத்திய அரசின் ''ஸ்வச் பாரத் – தூய்மை இந்தியா'' திட்டத்தின் கீழ் மத்திய, மாநில மற்றும் மாநகராட்சியின் பங்களிப்பாக மொத்தம் ரூ.8,000/– வழங்கப்படுகிறது. இதுகுறித்து பயனடைய தங்கள் பகுதியில் உள்ள சென்னை மாநகராட்சி வார்டு அலுவலகங்களில் விண்ணப்பங்கள் பெறவும் மற்றும் பூர்த்தி செய்து கணினி வலைதளம் மூலம் மட்டுமே பதிவேற்றம் செய்யவும் அணுகலாம். கழிப்பறை கட்டுவதற்கான நிதியுதவி விண்ணப்பங்கள் உரிய ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வீட்டு உரிமையாளர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்படும்.

மேலும் விவரங்களுக்கு 044–25303683–687, 9445910951 மற்றும் 9445190464 என்ற எண்களுக்கு பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**